
## ஆய்வுப்பொருள்: இரண்டு:-
## இறையருளை வழங்கும் அருளடையாளங்கள்

**16**

## 2.8. திருச்சபையின் பணியில் பொதுநிலையினரின் பங்களிப்பு



திருச்சபை என்பது இறைமக்களின் கூட்டம். இறையாட்சியின் சமூகம். இதன் உறுப்பினர் அனைவரும் அடிப்படைச் சமத்துவமும் சகோதரத்துவமும் கொண்டுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தனித்தன்மைக்கு ஏற்ப அழைப்புப் பெற்று பணி செய்ய அனுப்பப்படுகின்றனர்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் இறைமக்களின் சமூகத் தன்மையை இறைத் தந்தையின் மீட்புத் திட்டத்தில் இணைத்துள்ளது. திருச்சபை என்பது திருப்பொழிவு பெற்ற மக்கள் இனம், கடவுளின் மக்கள், தூய மக்கள் கூட்டத்தினர் என்ற திருச்சபையின் அடிப்படைத் தன்மையை உறுதி செய்துள்ளது.



இலவச விநியோகத்திற்காக

இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்று உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்.

(கலா. 3:28)

அந்த ஒரே ஆவியாரே இவற்றையெல்லாம் செயல்படுத்துகிறார்; அவரே தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் இவற்றைப் பகிர்ந்தளிக்கிறார். உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்.

(1கொரி. 12:11-12)

அருட்பணியாளர்களே,
திருச்சபையில் பொதுநிலையினர் கொண்டுள்ள மேன்மையையும், பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு அவற்றை மேம்படச் செய்ய வேண்டும். பொதுநிலையினரின் முன்மதியுள்ள அறிவுரையை விருப்புடன் அவர்கள் பயன்படுத்துவார்களாக. திருச்சபையின் பணிப்பொறுப்புகளை அவர்களிடம் நம்பிக்கையோடு ஒப்படைத்து, அவர்கள் சுதந்திரத்தோடு செயல்புரிய வாய்ப்பு அளிக்க வேண்டும். மேலும், தாங்களாகவே பணிகளை ஏற்று நடத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டும். பொதுநிலையினர் பரிந்துரைக்கும் திட்டங்களையும், கருத்துக்களையும், ஆவல்களையும், தந்தைக்குரிய அன்புடன் கிறிஸ்துவின் மனநிலையோடு தனிப்பட்ட விதமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2ம் வத்திக்கான் சங்க ஏடு
திருச்சபைக் கொள்கைத்திரட்டு # 37



இலவச விநியோகத்திற்காக

**குழுக்களாகப் பிரிந்து பின்வருவனவற்றைச் செய்க:**

- பொதுநிலையினரின் திருச்சங்கம் என்று அழைக்கப்படும் இரண்டாம் வத்திக்கான் சங்கம் பொதுநிலையினருக்குரிய இயல்புகளையும், மாண்பையும், உரிமைகளையும், பணிகளையும், கடமைகளையும் பற்றி கீழே உள்ள திருவிவிலியப் பகுதியில் எவ்வாறு விபரித்துள்ளது என்பதைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுக?
  (எசாயா 49:6, திருத்தூதர் பணிகள் 1:6-8)
- இயேசு இவ்வுலக வாழ்க்கையின்போது தனது திருத்தூதர்களை முப்பணிகளைச் செய்யப் பணித்தார். இது இன்று திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அவை எவை என்பதைக் குறிப்பிட்டு அவற்றை இன்று ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் எப்படி வாழ்கின்றான் என்பதைக் கலந்துரையாடி எழுதுக.

இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின்னர் பொதுநிலையினர் திருத்தூதர் கற்பிப்பதிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தனர். நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர். வளங்களை தேவைகளுக்கு ஏற்ப பகிர்ந்து கொண்டார்கள். அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே மனமும் உள்ளவர்களாய் இருந்தனர்.

**வாசிக்கவும்:**

அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது. திருத்தூதர் வழியாகப் பல அருஞ்செயல்களும் அடையாளங்களும் நிகழ்ந்தன. நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர்; எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்பப் பகிர்ந்தளித்தனர்; ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள்; பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள். எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள்; ஆண்டவரும் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார்.

(தி.ப. 2:42-47)



இலவச விநியோகத்திற்காக

இப்படிப்பட்ட பொதுநிலையினர்தான் பெனிசியா, சைப்பிரசு, அந்தியோக்கியா ஆகிய இடங்களுக்குச் சென்று இறைவார்த்தையை அறிவித்தவர்கள்.

## தொடக்கத் திருச்சபையின் பொதுநிலைப் பணி:

கிறிஸ்து தமது தூதுப் பணிக்காக சாதாரண மக்களிலிருந்து 12 திருத்தூதர்களைத் தெரிந்தெடுத்தார். இவர்களுக்கு விசேட அதிகாரங்கள் பல அளித்தார்.

- நோயாளர்களைக் குணப்படுத்தும் அதிகாரம்.
- பேய்களை அடக்கும் அதிகாரம்.
- இறையாட்சி பற்றி பறைசாற்றும் அதிகாரம்.

> இறையாட்சிபற்றிப் பறைசாற்றவும் உடல் நலம் குன்றியோரின் பிணி தீர்க்கவும் அவர்களை அனுப்பினார்.
>
> (லூக். 9:2)

இயேசுவும் தம் சீடர்களுக்கு அதிகாரம் அளித்து பணிக்காக அனுப்பி வைத்தார். பணியைச் சரிவரச் செய்து முடிக்க அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்.

- பயணத்திற்காக எதையும் எடுத்துச் செல்ல வேண்டாம்.
- கைத்தடி, பை, உணவு, இரண்டு அங்கிகள், வேறு எதையும் எடுத்துச் செல்ல வேண்டாம்.
- எந்த வீட்டுக்குள் சென்றாலும் அங்கேயே தங்கியிருங்கள்.

> அப்போது அவர்களை நோக்கி, “பயணத்திற்குக் கைத்தடி, பை, உணவு, பணம் போன்ற எதையும் எடுத்துக்கொண்டு போக வேண்டாம். ஓர் அங்கி போதும். நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும் அங்கேயே தங்கியிருங்கள்; அங்கிருந்தே புறப்படுங்கள். உங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களுடைய நகரைவிட்டுப் புறப்படும்போது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்” என்றார். அவர்கள் ஊர் ஊராகச் சென்று எங்கும் நற்செய்தியை அறிவித்து நோயாளிகளைக் குணமாக்கினார்கள்.
>
> (லூக். 9:3-6)



இலவச விநியோகத்திற்காக

மறைத்தூதுப் பணியாளர் தமது பணி வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும், உலக வாழ்வில் இறை பராமரிப்பில் நம்பிக்கை வைக்க வேண்டுமெனவும் தெளிவாகக் கூறப்படுகின்றது.

மேலும் மறைத்தூதுப்பணியைக் குழுமமாகச் செய்ய வேண்டுமெனவும் கூறுகிறார். இயேசுவால் பயிற்றப்பட்ட பொதுநிலை மறைத்தூதுப் பணியாளர் குழுமத்தில் மேலும் அதிகமானோர் இணைந்து கொண்டனர். லூக்கா 10:1இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி எழுபத்திரெண்டு பேரை இப்பணிக்காக இயேசு நியமித்தார். தமக்குப் பிறகு இறையாட்சியை நிறுவுவதை நோக்காகக் கொண்ட இக்குழுவினர் தமது வாழ்வால் சாட்சியம் பகர்ந்தனர். அதன் விளைவாக, இன்று திருச்சபையில் பணியாற்றும் பொதுநிலை மறைத்தூதுப் பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் பொதுநிலை அப்போஸ்தலிக்கப் பணிக்காக உலகின் மத்தியில் அனுப்பப்பட்டுள்ளனர். திருமுழுக்கு அருளடையாளத்தில் வழியாக இவ்வழைப்பை இவர்கள் பெற்றுள்ளனர்.

## பொதுக்குருத்துவம் வழியாக பொதுநிலையினர் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முப்பணிகள்

### போதிக்கும் பணி (இறைவாக்கு)

- **மறைதூதுப்பணி.**
- **வாசகர் பணி.**
- **இறையியல் கற்றல்.**
- **சமூகத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தல்.**
- **நற்செய்தி, தியானக் கூட்டங்களை நடாத்தல்.**
- **விவிலிய, திருவழிபாடு, இறையியல் வகுப்புக்களை நடாத்தல்.**
- **சமய ஆன்மீக உரைகள் நடாத்துதல்.**

### புனிதப்படுத்தும் பணி (குருத்துவ)

- **அருட்சாதனங்களை வழங்குதல்.**
- **அருள் வேண்டல் வழங்குதல்.**
- **நற்கருணை ஆராதனை நடாத்துதல்.**
- **திருப்புகழ்மாலை சொல்லுதல்.**
- **அருளடையாளங்களைப் பெறத் தயார்ப்படுத்தல்.**
- **நற்கருணை வழங்குதல்.**
- **வழிபாடுகளை நடாத்துதல்.**


இலவச விநியோகத்திற்காக

**வழிநடத்தும் பணி (அரச)**

* **திருச்சபையின் அலுவல்களில் பங்கேற்றல்.**
* **சட்டத்துறை : முக்கிய திருச்சபைக் கூட்டங்களில் கலந்து ஆலோசனை வழங்குதல்.**
* **நீதித்துறை : அருட்பணி, திட்டமிடல் குழுவில் பொதுநிலையினரும் இடம் பெறல்.**
* **நிர்வாகத்துறை : மறைமாவட்ட நிர்வாகக் குழுவில் பொதுநிலையினர் சிலர் இடம் பெறலாம்**

### பொதுநிலை ஆன்மீகம் :

ஆரம்ப காலத்தில் அநேகர் ஆன்மீக வாழ்வைத் தேடி துறவற வாழ்வுக்குச் சென்றனர். அங்குதான் ஆன்மீகம் உண்டென நம்பியிருந்தனர். இரண்டாம் வத்திக்கான் சங்கம் குழுவாக ஒன்றிணைந்து தூய்மையாக வாழ வேண்டுமென எடுத்துரைக்கின்றது. கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற பாஸ்கா மறைபொருளில் நாம் பங்கு கொள்வதன் மூலமே 'கிறிஸ்தவத் தூய்மை' எமக்குக் கிடைக்கின்றது. அனைவரும் தூய நிலைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். தமது வாழ்வின் அழைப்பு எவ்வாறாயிருப்பினும் தமது பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுவதன் மூலம் தூய நிலையைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக அன்பு வாழ்க்கை வாழ்வது முக்கியமாகும். மேற்கூறப்பட்ட பணிகளை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்பே செயற்படுத்த ஊக்கமும், வழிகாட்டல்களும் தரப்பட்டுள்ளன. எனவேதான், இன்று எமது பங்கிலே, மறைக் கோட்டத்திலே, மறை மாவட்டத்திலே பொதுநிலையினர் ஒரு முக்கிய இடத்தினை வகிப்பதோடு பங்கேற்கும் திருச்சபையாக செயற்படுகின்றார்கள் எனலாம்.

### குழுச்செயற்பாடு

- கிறிஸ்தவ மாணவர் என்ற வகையில் பாடசாலையிலும், பங்கிலும் இன்று நீர் ஆற்றக்கூடிய முப்பணிகள் எவை?

- மாணவர்கள் ஐந்து குழுக்களாகக் கீழ்வரும் பணிகளைப் பற்றிக் கலந்துரையாடி பயிற்சி நூலில் எழுதுவர்.

1. தூய வின்சன்ட் டி பவுல் சபை.
2. அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கம். (தூய ஆவி)
3. திருப்பாலத்துவ சபை.
4. இளைஞர், யுவதிகள் மன்றங்கள்.
5. பீடப்பணியாளர் சபை.



இலவச விநியோகத்திற்காக